**யாழ்ப்பாண பல்கலைக்கழக கல்லூரி - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

யாழ்ப்பாண பல்கலைக்கழக கல்லூரியின் ("கல்லூரி") 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து கல்லூரி 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் *நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்* பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கல்லூரி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கல்லூரியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர

தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கல்லூரி நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனி கல்லூரியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

---------------------------------------------------

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இயலுமான அளவில் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கல்லூரிச் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கல்லூரி ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்து மூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகள்**

**1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 7 இன் படி முழுமையாக தேய்விடப்பட்டு இன்றுவரை பயன்படுத்தப்பட்டுவரும் ரூபா. 35,294,852 பெறுமதியான ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படாததுடன் மேற்படி சொத்துக்களின் பயன்படுகால மதிப்பீட்டுத் தவறை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 3 இன் படி நிவர்த்தித்து நிதிக்கூற்றுக்களில் சீராக்கம் செய்யப்படவில்லை. | எதிர்காலத்தில் போதிய நிதி பெற முயற்சி எடுக்கப்பட்டுள்ளதுடன் இதனை மீள கருத்திலெடுக்கப்படும். | தொடர்புடைய நியமத்துடன் இணங்குதல் வேண்டும். |

**1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | கல்லூரி கட்டடம் கட்டப்பட்டுள்ள கல்லூரிக்கு சொந்தமான 0.33 ஹெக்டெயர் பரப்பளவான காணி மதிப்பிடப்பட்டு கணக்குகளிற்கு கொண்டுவரப்படவில்லை. | நாங்கள் உங்கள் கருத்துரையை ஏற்று காணிக்கான உறுதியை பெற்று, மதிப்பிட்டு, நிதிக்கூற்றுக்கு வெளிப்படுத்த உடனடி நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | காணி மதிப்பிடப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்பட வேண்டும். |
| (ii) | தற்காலிக மற்றும் பதவி விலகிய ஊழியர்களுக்கு ஏற்பாடு செய்ததன் காரணமாக 2022 ஆம் ஆண்டில் பணிக்கொடை ஏற்பாடு ரூபா. 1,679,755 ஆல் கூட்டிக் காட்டப்பட்டிருந்ததுடன் இவ் தவறை நிவர்த்திசெய்ய சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதன் | உங்கள் கருத்தை ஏற்று அது தொடர்பில் எமது தலைமை நிறுவனத்திடம் ஆலோசனை பெற்று பொருத்தமான நடவடிக்கை உங்கள் தீர்வுப்படி எடுக்கப்படும். | அவசியமான சீராக்கங்கள் நிதிக் கூற்றுக்களில் செய்யப்பட வேண்டும். |

விளைவாக நிகழாண்டிற்கான பணிக்கொடை ஏற்பாடு குறித்த தொகையால் கூட்டிக் காட்டப்பட்டிருந்ததுடன் மேலும் தவறான கணிப்பீட்டால் நிகழாண்டுக்கான பணிக்கொடை ரூபா. 218,268 ஆல் கூட்டிக் காட்டப்பட்டுள்ளதுடன் அதன் விளைவாக நிதி செயலாற்றல் குறித்த அளவால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (i) | 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் உபபிரிவு 40(1) | கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட 2014 இலிருந்து உள்ளக கணக்காய்வு தொழிற்பாட்டை நிறைவேற்ற உள்ளகக் கணக்காய்வினை கல்லூரி ஆளுகை சபை நியமிக்கவில்லை. | எமது அமைச்சினூடாக முகாமை சேவைத் திணைக்களத்தை உள்ளக கணக்காய்வாளர் ஆளணிக்கு கோரியிருந்தும் இன்றுவரை அனுமதி பெறப்படவில்லை. | உள்ளக கணக்காய்வு தொழிற்பாடு கட்டாயம் உருவாக்கப்பட வேண்டும். |
| (ii) | 2017 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்திச் சட்டம் | அடையப்பட்ட இலக்குகளை மதிப்பிடுவதற்கான குறிகாட்டிகள், தொடர்புடைய செயற்பாட்டு இலக்குகள் கல்லூரியால் அங்கீகரிக்கப்பட்டிருக்கப்படவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் இலக்கம் 4 மற்றும் 5 எமது செயற்பாட்டு திட்ட நோக்கத்திற்கு கருத்தில் எடுக்கப்பட்டதுடன் உங்கள் கருத்துப்படி, இலக்கு, கூட்டிணைவு மதிப்பீடு மேற்கொள்ள | சட்டத்தின் ஏற்பாட்டுடன் இணங்குதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (iii) | 2016 ஆம் ஆண்டு மார்கழி 29 ஆம் திகதிய 30/2016 பொது நிர்வாக சுற்றறிக்கை | வாகன செயலாற்றுகையின் மாதாந்த பொழிப்பு தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | உரிய காலத்தில் தொடர்ந்து தயாரிக்கவும், உங்களுக்கு அனுப்பவும் உடனடி நடவடிக்கை எடுக்கப்படுகிறது. | சுற்றுநிருப வழிகாட்டலுடன் இணங்குதல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

நிகழாண்டுக்கான செயற்பாட்டு விளைவு ரூபா. 3,578,610 பற்றாக்குறையாக இருந்ததுடன் தொடர்புபட்ட முன்னைய ஆண்டில் ரூபா. 3,577,995 ஆன மிகையை காட்டியிருந்தது. இதனால் நிதி விளைவில் ரூபா. 7,156,605 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. இது வருமானக் குறைவினால் ஏற்பட்டதாகும்.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கடந்த 04 ஆண்டுகாலத்தில் கல்லூரியில் கற்ற 899 மொத்த மாணவர்களில் 4 இலிருந்து 43 சதவீத வீச்சிலான 254 மாணவர்கள் கற்கை நெறிகளை முழுமைப்படுத்தாது இடை விலகியிருந்தனர். | கல்லூரி கற்கைநெறி முடிவுவரை மாணவன் வைத்திருந்த தந்திரோபாயங்களை அமுலாக்கியுள்ளது. மேலும் நாங்கள் கட்டாயம் உறுதி கூறுகிறோம் இவ்விடயத்தில் எதிர்காலத்தில் கவனம் எடுக்கப்படும். | மாணவரின் இடைவிலகல் விகிதத்தினை குறைந்தளவில் வைத்திருக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**3.2 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கடந்த 06 ஆண்டுகளுக்கு மேலாக மாணவர்களுக்கு பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்கப்படாது கல்லூரி களஞ்சியத்தில் ரூபா.43,956 பெறுமதியான ரீசேட்கள் பயன்பாடற்று காணப்பட்டிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களில் நடைமுறைச் சொத்தின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | 2022 மாசி 29 ஆம் திகதி நடந்த 52 ஆவது முகாமைத்துவ சபை குழுக்கூட்டத்தில் அனுமதி பெற்று முகாமைத்துவசபை குழு கோரிக்கைப்படி மாணவர்களுக்கும், அலுவலர்களுக்கும் இலவசமாக ரீசேட்கள் விநியோகிக்கப்பட்டுள்ளது. | சொத்தை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |